# மெட்ரோவில் பயணிக்க மக்கள் ஆர்வம்



மெட்ரோ ரயிலில் காணப்பட்ட பயணியர் கூட்டம்.

சென்னை, ஜன. 18–

காணும் பொங்கலையொட்டி, மெட்ரோ, மின்சார ரயில்களில், நேற்று கூட்டம் அதிகம் இருந்தது.

பொங்கல் பண்டிகையையொட்டி, மெட்ரோவில், 15ம் தேதியில் இருந்து நேற்று வரை, 50 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்பட்டிருந்தது.

காணும் பொங்கலையடுத்து, நேற்று மதியத்தில் இருந்து, மெட்ரோ ரயில்களில் கூட்டம் அதிகம் இருந்தது. மெட்ரோ ரயில்கள் விமான நிலைய நிறுத்தத்தில் இருந்து புறப்படும் போதே, 'ஹவுஸ் புல்' ஆனது.

மெட்ரோ ரயில் சேவை, நேரு பூங்கா – சென்ட்ரல், டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை வரை நீட்டிக்கப்பட்டு, 11 மாதங்கள் ஆகியும், மெட்ரோவில் இதுவரை பயணம் செய்யாதோர், குறைந்த கட்டணத்தில் நேற்று, குடும்பத்தாருடன் பயணம் செய்து மகிழ்ந்தனர்.

விமான நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக சென்ட்ரலுக்கு இயக்கப்பட்ட மெட்ரோ ரயில்களிலும் கூட்டம் அதிகம் இருந்தது.

அதேபோல், செங்கல்பட்டு–கடற்கரை, திருவள்ளூர் – சென்ட்ரல், கடற்கரை – வேளச்சேரி புறநகர் மின்சார ரயில்களிலும் பயணியர் கூட்டம் அதிகம் இருந்தது.

வெளியிடங்களில் இருந்து, மெரினா கடற்கரைக்கு செல்வோர், கடற்கரை – வேளச்சேரி ரயிலில், பூங்கா ரயில் நிலையத்தில் இருந்து, அதிகமானோர் பயணம் செய்தனர்.

சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, கலங்கரை விளக்கம் நிலையங்கள் வழியாக, மெரினாவுக்கு பயணியர் அதிகம் சென்றனர். இதனால், இந்நிலையங்களில், ரயில்வே போலீசார் மற்றும் ரயில்வே பாதுகாப்பு படையினர், வழக்கத்தைவிட கூடுதலாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.